**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**

**திருப்பூர்.**

| | | |
|---|---|---|
| **<u>அ.வ.எண்.</u>** | : | **<u>51/2022</u>** |
| **<u>வா. சா.</u>** | | **<u>1</u>** |
| **பெயர்** | : | விஜயக்குமார் |

-----------------------------------------------

**நாள்: 24.07.2026**

**சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம்: 12.13 am to 12.18 am**

**சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்திய பிரமாணம் செய்து குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.**

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

முத்துபோயன் மேசன் வேலை செய்கிறார் என்றால் சரிதான். அவரது மனைவியும் கட்டுமான தொழிலில் இருக்கிறார். அவர்கள் இருவருக்கும் கட்டிட வேலை தான். திருப்பூர் பழைய கோர்டுக்கு நான் வந்ததில்லை, என் தகப்பானார் வந்து இருக்கிறார். முத்துபோயன் மனைவி நாச்சம்பாள் வழக்கு சொத்தை கிரயம் பெற்றது எனக்கு தெரியாது. முத்துபோயன் மகள்கள் மற்றும் மகன் நடராஜ் ஆகியோர்களும் கட்டிட வேலை தான் செய்கிறார்கள். இவ்வழக்கில் தரப்பினராக சரஸ்வதி சேவூர் நம்பியூரில் இருக்கிறார் அவருக்கும் கட்டிட வேலை தான். வாதி, பிரதிவாதிகளுக்கு கட்டிட வேலை தான் என்றால் சரிதான்.

**24.07.2026 அ.வ.எண். 51/2022 வா.சா. 1**

2. வழக்கு சொத்தை பொறுத்து 10.4.1997 ல் 3 ம் பிரதிவாதிக்கு முத்துபோயன் மனைவி நாச்சம்மாள் ஒரு உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் எங்களுக்கு எழுதி வைத்துள்ளார்.

குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

**6.8.2026**

சாட்சி மீண்டும் முன்னிலை ஆகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

20.4.1999 தேதியில் 10.4.1997 ல் எழுதி வைத்த உயிலை மேற்படி நாச்சம்மாள் ரத்து செய்தார் என்றால் சரிதான். அதே தேதியில் மேறப்டி நாச்சம்மாள் தன்னுடைய மகன் நடராஜனுக்கு வழக்கு சொத்தை பொறுத்து ஒரு கிரைய பத்திரம் எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான், அது அவர் சுய நினைவில்லாமல் எழுதி கொடுத்தது. முத்துபோயன் மனைவி நாச்சம்மாள் தனது இறப்பு வரை அமராவதி பாளையத்தில் தனியாக தான் இருந்தார் என்றால் சரியல்ல, நடராஜன் வீட்டில் தான் இருந்தார். அமராவதி பாளையத்தில் மேற்படி நாச்சம்மாளின் வீடு தற்போதும் இருக்கிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழககின் 1ம் பிரதிவாதி சரஸ்வதி திருப்பூர் PSJ, நீதிமன்றத்தில் அ.வ.எண்.130/2006 வழக்கை என் பாட்டி மீது

பாக பிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்து அது தள்ளுபடி ஆன விவரம் தெரியும். 20.4.1999 ம் தேதி வழக்கு சொத்தை பொறுத்து நடராஜ் கிரயம் பெற்ற சொத்து தனிப்பட்ட முறையில் அவருக்கு பாத்தியம் என்றால் சரியல்ல. மேற்படி கிரய பத்திரம் மோசடியானது என்று நான் சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. மேற்படி கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கும் வகையில் சார்பதிவாளர் அலுவலக்ததில் முறையாக பதிவு செய்யப்பட்டு இருப்பதால் அது செல்லுபடி ஆகும் என்றால் சரியல்ல. அதன் படியும் சுவாதீனத்தின் படியும் வழக்கு சொத்து 3 ம் பிரதிவாதிக்கு உரியது என்றால் சரியல்ல. அ.வ.எண்.130/2006 வழக்கில் என் தகப்பனார் கண்ணியப்பன் அதில் தரப்பினர் அல்ல. அந்த வழக்கை சரஸ்வதி பார்த்து கொண்டார். மேற்படி வழக்கில் என் பாட்டி நாச்சம்மாள் ஆஜர் ஆனார் என்றால் இல்லை. அவர் அழைப்பாணை பெற்று ஆஜராகாததால் அவருக்கு எதிராக 20.6.2007 ல் ஒரு தலைப்பட்ச தீர்ப்பு பெற்றார் என்றால் ஆமாம்.

3. அ.வ.எண்.130/2006 தள்ளுபடியை எதிரித்து AS No.10/2021 தாக்கல் செய்யப்பட்டு இந்த நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் உட்பட இந்த வழக்கின் வாதிகள் தரப்பினர்கள் என்றால் சரிதான். அதற்கு நான் முன்னிலை ஆகவில்லை என்பதால் தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான். ருக்குமணியும் அந்த வழக்கில்

ஆஜர் ஆகவில்லை. அவர் இந்த வழக்கிலும் ஆஜர் ஆகவில்லை. நானும் சரஸ்வதியும், ருக்குமணியும் நன்கு தெரிந்து தான் மேற்கண்ட வழக்கை ஒருதலை பட்சம் ஆகி இந்த வழக்கை நடத்து வருகிறோம் என்றால் சரியல்ல.

4. வழக்கு சொத்தை வாய்மொழி பாகப்பிரிவினை நடந்தது என்று வழக்கில் சொல்லி உள்ளேனா என்றால் சரிதான், சரஸ்வதி, ருக்குமணி, நாச்சம்மாள், நடராஜ் ஆகியோருக்கு இடையே வாய் மொழி பாகப்பிரிவினை நடந்தது. யார்யாருக்கு எந்த பாகம் ஒதுக்கப்பட்டது என்று எனக்கு தெிடிரயாது. அவ்வாறு ஒரு வாய்மொழி பாகப்பிரிவினை நடக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்துகள் முத்துபோயன் மனைவி நாச்சம்மாளுக்கு சுயசம்பாத்திய சொத்து என்றும், 3ம் பிரதிவாதிக்கு வழக்கு சொத்தை கிரையம் கொடுக்கும் வரை அவர் தான் அனுபவித்து வந்தார் என்றும், மற்ற பிரதிவாதிகளை பொறுத்து அவர்கள் வழக்கு சொத்தில் கூட்டாக அனுபவ சுவாதீனத்தில் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனவே, தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. கல்யாண சீர்வரிசையை பொறுத்து என் பாட்டி நாச்சிமுத்து மனைவி நாச்சம்மாளுக்கு 3ம் பிரதிவாதி எதுவும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 3ம் பிரதிவாதி வழக்கு சொத்தை தன் குடும்பத்துடன் தனியாக இருந்து வந்தார் என்றால்சரியல்ல, கூட்டாக தான் இருந்தார். வழக்கு சொத்தை 3ம் பிரதிவாதி கிரயம் பெற்ற முதல் தற்போது வரை அனுபவித்து வருவது என் பாட்டிக்கு தெரியும் என்றால் சரியல்ல. 25.10.1999ம் தேதி முத்துபோயன் மனைவி நாச்சம்மாள் இறந்த போனதற்கு பின்னிட்டு அவர்கள் மகள்கள் நாச்சிமுத்து மனைவி நாச்சம்மாளும் வழக்கு சொத்தை பொறுத்து 3ம் பிரதிவாதியிடம் சென்று கேட்டார்கள் என்றால் சரிதான். அப்போது அவர் மேற்படி வழக்கு சொத்தை

கிரயம் பெற்று விட்டார் என்றால் சரிதான். 20.4.1999 ம் தேதியிட்ட கிரையம் மூலம் தனக்கு பாத்தியம் என்று சொல்லி விட்டார். நாச்சிமுத்து மனைவி நாச்சம்மாள் மேற்படி கிரையம் விவரம் தெரிந்த பிறகு அ.வ.எண்.130/2006 என்ற வழக்கில் நீதிமன்ற அழைப்பாணை பெற்றுவிட்டு வழக்கை நடத்த வில்லை என்றால் சரியல்ல. மீண்டும் மீண்டும் 3 ம் பிரதிவாதியை அழைக்களிக்க வேண்டும என்பதால் நான், 1 ம் பிரதிவாதி, 2 ம்பிரதிவாதி ஆகியோர் கூட்டு சேர்ந்து இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பதாலும், வழக்கு கால தோஷத்தால் பாதிக்கப்பட்டு இருப்பதாலும், வழக்கு சொத்தின் அனுபவ சுவாதீனம் இல்லை என்பதாலும், வழக்கின் நீதிமன்ற கட்டணைத்தை முறையாக செலுத்தவில்லை என்பதாலும் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

Typed to my dictation as deposed by the witness in Open Court and acknowledged by him / her to be correct.

KANAGARAJ RAMASAMY

II Additional District and Sessions Judge, Tiruppur.